
# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 27 ஹிஜ்ரி 1436 துல்ஹஜ் செப்டம்பர் 2015

இலவசம்




# இனிய பெருநாள் நல்வாழ்த்துக்கள்



# நம் எதிர்காலம் என்றைக்கும் ஒளிமயமாக இருக்கும்!
## தேசிய தின பொன்விழாச் செய்தியில் பிரதமர் உறுதி

ஆகஸ்ட் 9, 1965. சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்துவிட்டது. அது "என்றென்றும் ஓர் அரசுரிமையுள்ள, ஜனநாயக, சுதந்திர தேசமாக இருக்கும்" என்று அறிவிக்கப்பட்டது. சிங்கப்பூர் குடியரசு உதயமானது.

அப்போது நம் பொருளியல் ஒரு வலுவான நிலையில் இல்லை. நம்மிடம் எந்த வளமும், தனித்து இயங்கும் ஆயுதப் படைகளும் இல்லை. அன்று நண்பகலில், திரு லீ குவான் இயூ தொலைக்காட்சியில் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். "நாம் சிங்கப்பூரில் ஒரு பல இன தேசமாக இருக்கப் போகிறோம். நாம் ஓர் உதாரணமாக வாழ்வோம். இது ஒரு மலாய் தேசமல்ல. இது ஒரு சீனர் தேசமல்ல. இது ஓர் இந்தியர் தேசமல்ல. இங்கு, மொழி, கலாசாரம், சமயம் அனைத்திலும் எல்லாருக்கும் சம உரிமை இருக்கும்" என்று அவர் வாக்குறுதி அளித்தார்.

அந்த நொடியில் இருந்து, நாம் ஒரு தேசத்தை உருவாக்கத் தொடங்கினோம். அது ஒரு சாதாரணப் பயணமாக அமையவில்லை. சிங்கப்பூர் ஓர் அரசுரிமையுள்ள நாடாக வெற்றிகாண முடியும் என்று நம் முதல் தலைமுறைத் தலைவர்கள் மக்களுக்கு நம்பிக்கையூட்டினர். சிங்கங்களாக, துணிச்சல் மிக்கவர்களாக நம் தலைவர்களும் மக்களும், நாட்டை வலுப்படுத்த அசைக்க முடியாத மன உறுதியுடன் ஒற்றுமையாகப் போராடினார்கள். அவர்களுக்குப் பிறகு, இளைய தலைமுறையினர் அந்தப் பொறுப்பை ஏற்று, சிங்கப்பூரை அடுத்த நிலைக்குக் கொண்டு சென்றனர்.

ஆண்டுக்கு ஆண்டு, சிங்கப்பூர் முன்னேற்றம் கண்டது. அதே சமயத்தில், நம் பாதையில் பல பிரச்சினைகளும் எழுந்தன. அவற்றை எல்லாம் நாம் சமாளித்து முன்னேறினோம். நம் பொருளியலை வளர்த்து, வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தினோம். வீடுகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், பூங்காக்கள் எனப் பல வசதிகளை அமைத்தோம். நாம் ஒரு தேசத்தை உருவாக்கினோம்.



1965ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 9ஆம் தேதியன்று திரு லீ குவான் இயூ அளித்த வாக்குறுதிகளை இத்தனை ஆண்டுகளாக நாம் காப்பாற்றி வந்துள்ளோம். "இனம், மொழி, மதம் ஆகிய வேற்றுமைகளை மறந்து, நாம் ஒன்றுபட்ட மக்களாக இருப்போம்," நம் எதிர்காலம் என்றைக்கும் ஒளிமயமாக இருக்கும் என்று அவர் உறுதியளித்தார்.

எனவே, நமது 50ஆவது பிறந்தநாளை நாம் பெருமையுடன் கொண்டாடப் பல முக்கியக் காரணங்கள் உள்ளன.

நம் தேசிய சேவையாளர்கள் தங்கள் ரத்தத்தாலும் வியர்வையாலும் 50 ஆண்டு காலமாக அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

எல்லாவற்றையும் விட, எவரும் பின்தங்கிவிடாமல், ஓர் ஒன்றுபட்ட மக்களாய், வளர்ச்சி அடைந்த நாடாக முன்னேறியிருக்கிறோம். ஒவ்வொரு குடிமகனும் சிங்கப்பூரின் முன்னேற்றத்தால் நன்மை அடைந்துள்ளார். எந்த இனத்தவராக இருந்தாலும், எந்தப் பின்னணியைச் சார்ந்தவராக இருந்தாலும், எத்தகைய வீட்டில் வசித்தாலும், அனைவருக்கும் வாழ்க்கை மேம்பட்டுள்ளது. கிட்டத்தட்ட எல்லா சிங்கப்பூரர்களுக்கும் சொந்த வீடு உள்ளது. வாழ்க்கையில் மேன்மை அடைய எல்லாருக்கும் வாய்ப்புகள் உள்ளன. தங்கள் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும் என அனைவரும் எதிர்பார்க்கலாம்.

இந்த 50வது ஆண்டில், நாம் ஓர் உயர்ந்த நிலையில் நின்று, எவ்வளவு தூரம் முன்னேறி வந்துள்ளோம் என்பதைக் கண்டு வியக்கிறோம். இதைச் சாதிக்க உதவியோருக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்கிருந்து, நாம் புதிய சிகரங்களை நோக்கிச் செயல்படலாம். நம்முன் உள்ள பாதை நாம் பயணம் செய்யாத ஒன்று. இருந்தாலும், நாமும், நம் பிள்ளைகளும் மேலும் சிறந்த நிலையை அடைய நாம் தொடர்ந்து பாடுபட வேண்டும்.

நாம் எப்போதும் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருப்பதால், நம்மால் நிச்சயமாக நம் இலக்கை அடைய முடியும். ஒன்றுபடும் போது நம் வலிமை கூடுகிறது. லாரிக்கு அடியில் சிக்கியவரைக் காப்பாற்ற ஒன்றுசேர்கிறோம். இசை நின்றாலும், தேசிய கீதத்தைத் தொடர்ந்து உற்சாகத்துடன் பாடுகிறோம். நமது கடந்த காலத்தை எண்ணிப் பெருமிதம் அடைகிறோம். எதிர்காலம் குறித்து நம்பிக்கையுடன் இருக்கிறோம். ஒருமக்களாக, சிங்கப்பூர் மீது நம்பிக்கையும் பற்றும் வைத்துள்ளோம்.

இப்போது நான் விக்டோரியா இசையரங்கு மண்டபத்தில் இருந்து பேசுகிறேன். சிங்கப்பூரின் வரலாற்றில் இந்த இடத்திற்குச் சிறப்பு முக்கியத்துவம் உள்ளது. முன்பு இது விக்டோரியா நினைவு மண்டபம் என்று அழைக்கப்பட்டது. இங்குதான், திரு லீ குவான் இயூ மக்கள் செயல் கட்சியைத் தொடங்கினார். ஒரு நியாயமான, சமத்துவமான சமுதாயத்தை உருவாக்க நீண்டநாள் போராட்டத்தை ஆரம்பித்தார். இங்குதான், “மஜுலா சிங்கப்பூரா” முதன் முறையாக அரங்கேறியது. சுதந்திரம் பெற்ற பிறகு, அருகில் இருக்கும் பாடாங்கில்தான் நமது தேசிய தின அணிவகுப்புகளை நடத்தினோம். ஒரு தேசமாக, ஒன்றுசேர்ந்து “மஜுலா சிங்கப்பூரா” வைப் பாடினோம்.

50 ஆண்டுகள் கடந்துவிட்டன. நமது இந்தப் பொன்விழா ஆண்டில் நாம் மீண்டும் பாடாங்கில் ஒன்றுகூடுவோம். “மஜுலா சிங்கப்பூரா” வைப் பெருமிதத்துடன் பாடி, தேசிய பற்றுறுதியை எடுத்துக்கொள்வோம். கடந்த 50 ஆண்டுகளின் வெற்றியைக் கொண்டாடுவோம். இனம், மொழி, மதம் ஆகிய வேற்றுமைகளை மறந்து, ஒன்றுபடுவோம். நம் நாடு, மகிழ்ச்சி, வளம், முன்னேற்றம் ஆகியவற்றை அடையும் வண்ணம், ஒற்றுமையாகச் செயல்பட நாம் புதிய உறுதியை மேற்கொள்வோம்.

*50-வது தேசிய தின நல்வாழ்த்துக்கள்!*

---

# நமது சமூகத் தலைவர்களுக்கு தேசிய தின விருதுகள்




கொடை வள்ளலும், எம்.இ.எஸ்.(MES) குழுமத்தின் இயக்குநருமான ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீல் அவர்களுக்கும், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக்கின் தலைவர் நசீர் கனி அவர்களுக்கும் இவ்வாண்டு தேசிய தின பொதுச்சேவை சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

யூனுஸ் குடிமக்கள் ஆலோசனை மன்றத்தின் புரவலராக பங்காற்றி வரும் ஹாஜி அப்துல் ஜலீல், பொதுச்சேவை நட்சத்திர (BBM) விருது பெற்றார்.

வெஸ்ட் கோஸ்ட் சமூக மன்ற மேலாண்மை குழுவிலும், இந்திய நற்பணி செயற்குழுவிலும் பணியாற்றி வரும் ஹாஜி நசீர் கனி பொதுச்சேவை (PBM) விருது பெற்றார்.

# சீரும் சிறப்பும் மிக்க வெற்றிகரமான பல இன, சமய நல்லிணக்க நாடு சிங்கப்பூர்

பல இனச் சமூகமாகத் திகழ வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஒரு சுதந்திர நாடாகப் பயணத்தைத் தொடங்கிய சிங்கப்பூர் ஐம்பது ஆண்டுகளில் அந்த இலக்கை அடைந்து வெற்றி பெற்றுள்ளது என்று பிரதமர் லீ சியன் லூங் தேசிய தினப் பற்றுறுதி நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்.

சுமார் முப்பது மலாய்-முஸ்லிம் அமைப்புகளும், அவற்றின் பங்காளித்துவ அமைப்புகளும் அங் மோ கியோ தொழில் நுட்பக் கல்விக் கழகக் கல்லூரியில் 8.8.2015 அன்று நடத்திய அந்த நிகழ்ச்சியில் பிரதமர் உரையாற்றினார்.

"ஒருவரின் இனம், சமயம், மொழி எதுவாக இருந்தாலும் எல்லோருக்கும் சரிசம உரிமைதான் என்ற கோட்பாட்டைக் கடைப் பிடித்து சிங்கப்பூர் வெற்றிகரமான பல இன சமூகமாகத் திகழ்கிறது. பல இன, சமய சிங்கப்பூரர்கள் ஒன்றுசேர்ந்து சிங்கப்பூரின் பொன்விழாவைக் கொண்டாடும் அளவுக்கு நமது குடியரசு மேம்பட்டு வந்துள்ளதற்கு எடுத்துக்காட்டான நிகழ்ச்சி இது" என்று அவர் பாராட்டினார்.

மலாய்-முஸ்லிம் அமைப்புகள் முன்னின்று இந்தப் பற்றுறுதி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தாலும், சிண்டா, சீனர் மேம்பாட்டு உதவி மன்றம், யூரேஷியர்கள் சங்கம் ஆகிய சுய வுதவி அமைப்புகளும் இதில் அங்கம் வகிப்பது சிறப்புக்குரியது. இத்தகைய நிகழ்ச்சிகள் பல இன நாடாக சிங்கப்பூர் பெற்ற வெற்றியைப் பறைசாற்றுவதாக பிரதமர் சுட்டிக் காட்டினார்.




மலாய் மொழியிலும், ஆங்கிலத்திலும் பேசிய திரு லீ சியன் லூங், ஒருவரின் நிறத்தைப் பார்க்காமல் அவருடைய திறமை, தொண்டு ஆகியவற்றின் அடிப்படையில் மக்களைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்ற திட்டவட்டமான உறுதியுடன் சிங்கப்பூர் தனது பயணத்தை எப்படித் தொடங்கியது என்பதை விவரித்தார்.

"நல்லிணக்க பல இனச் சமூகத்தை நாம் பலப்படுத்தினோம். ஒவ்வொரு சமூகமும் தனது சொந்த கலாசாரத்தையும், மரபுகளையும் கட்டிக்காக்கும்அதேவேளையில்,அனைத்து சமூகங்களும் ஒரே சிங்கப்பூர்அடையாளத்தில் ஒருங்கிணையும் சுய சார்பையும், பரஸ்பர ஆதரவையும் நாம் பேணி வளர்த்தோம். ஒருவர் மற்றொருவருக்கு உதவுகிறோம். யாரும்கைவிடப் படவில்லை. அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டிக் காத்தோம். அரசாங்கம் தன்னால் இயன்ற அளவுக்கு சிங்கப்பூரர்களுக்குச் சேவையாற்றுகிறது. சிறுபான்மையினர் தங்களுக்குரிய இடம் சிங்கப்பூரில் உண்டு என்று நம்புகிறார்கள். நமது நாடு என்று பெருமைப்படுகிறார்கள். நமது நாட்டின் சிறப்பு இது என்று பிரதமர்பெருமிதம் தெரிவித்தார்.

---

# முன்னோடித் தலைமுறையினர் வழியில் முன்னேறுவோம்!

சிங்கப்பூரில் பின்பற்றப்படும் இஸ்லாமிய சமய நெறிமுறைகளை உருவாக்குவதில் முன்னோடித் தலைமுறையினர் அரிய பங்காற்றியுள்ளனர். இளைய தலைமுறையினர் அந்த வழிமுறை களைப் பின்பற்ற வேண்டும் என்று தொடர்பு, தகவல் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

நோன்புப் பெருநாள் தொழுகைக்குப் பிறகு அல்காஃப் கம்போங் பள்ளி வாசலில் அவர் பேசினார். முஸ்லிம் இளையர்கள் இஸ்லாமிய மார்க்கக் கல்வியை சிறப்பாகப்

# சிங்கப்பூர் நமது குடும்பம், சமூக இல்லம்
## அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் பாராட்டு



சிங்கப்பூர் SG50 பொன்விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் ஒரு மாதம் ரமலான் நோன்பிருந்து பெருநாளைக் கொண்டாடும் நல்வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. இதனால் முஸ்லிம் சமூகத்தினர் அனைவருக்கும் வளமான எதிர்காலம் அமையும்.

முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தமது பெருநாள் வாழ்த்துச் செய்தியில் இனிய தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்.

“நமது சிங்கப்பூர் நாட்டோடு ஒன்றுசேர்ந்து முஸ்லிம் சமூகமும் முன்னேற்றம் அடைந்துள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் உரிய பங்காற்றியுள்ளனர். சிங்கப்பூரர்களுக்கு ஊக்க சக்தியளிப்பதுடன், அவர்களின் விருப்பங்களை ஆதரிப்பதன் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை உருவாக்குவதில் நமது தலைவர்கள் தொடர்ந்து உழைப்பார்கள்” என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

புனித ரமலான் மாதத்தில் நமது பள்ளிவாசல்கள், சமய, சமூக அமைப்புகள், இல்லங்கள் அனைத்தும் திறந்தே உள்ளன. இது நமது சமூகத்தின் நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. இந்த நம்பிக்கை, எதிர்காலம் நமதே என்ற உறுதியை அளிக்கிறது. சிங்கப்பூர் நமது குடும்பங்களுக்கும், சமூகத்துக்கும் சிறந்த இல்லமாக விளங்கும்” என்று டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் பெருநாள் செய்தியில் பெருமிதத்துடன் கூறினார்.

---

பயின்று முன்னோர்களின் கோட்பாடுகளைப் பின்பற்ற வேணடும். நமது குடியரசில் கற்பிக்கப் படும் சமயக் கல்வி முறைகள் இஸ்லாமிய அடிப்படையைத் தழுவி அமைக்கப்பட்டவை. அவற்றை உறுதிப்படுத்த முன்னோடித் தலைமுறையினர் பெரிதும் பாடுபட்டனர் என்று முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சருமான யாக்கூப் இப்ராஹிம் ஆலோசனை வழங்கினார்.

சிங்கப்பூரின் சமயச் சார்பற்ற சூழலுக் கேற்ப இஸ்லாம் பின்பற்றப்படுகிறது. நமது நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து மற்ற சமயங்களுடன் நல்லிணக்கத்துடன் செயல்பட்டு வருகிறது என்று அவர் குறிப்பிட்டார். தலைமை முஃப்தி பத்ரிஸ் பக்ரம் கூறிய கருத்துகளையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

“நாம் நமது பாரம்பரியத்தைக் கைவிட்டு விடக் கூடாது. அதை ஆரத் தழுவி நமக்கு வழிகாட்டக்கூடிய சமய ஆசான்களுடன் ஆலோசனை நடத்தி அறிவுத் தளத்துக்குரிய சரியான ஆதாரங்களை இளைய தலைமுறை யினர் கண்டறிய வேண்டும் என்று முஃப்தி நினைவூட்டுகிறார். மேலும், சமாதானத்தையும், முன்னேற்றத்தையும் வளர்க்கக்கூடிய நீதி, அன்பு, பரிவு ஆகியவற்றை நிலைநிறுத்தக்கூடிய நெறிமுறைகளை முஸ்லிம்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகிறார். நமது முன்னோர்கள் பள்ளிவாசல்களைக் கட்டியும், அறக்கொடை சார்ந்த நடவடிக்கை களை மேற்கொண்டும், நமது மார்க்கத்தை சிறப்புடன் பின்பற்றுவதற்கு வலுவான அடித்தளமிட்டுள்ளனர் என்பதையும் முஃப்தி சுட்டிக் காட்டியுள்ளார்” என்று டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்தார்.

“முஸ்லிம் அல்லாதவர்களையும் ஆதரித்து, நம் வீடுகளுக்கு அழைக்கிறோம். ஒன்றாகக் கூடிப் பழகுகிறோம். நவீன உலகுடனும் சிங்கப்பூர் சமுதாயத்துடனும் நமது சமய வாழ்க்கை ஒத்துப்போகிறது என்பதை இந்தச் செயல்முறைகள் காட்டுகின்றன என்று அமைச்சர் கூறினார்.

# குடும்பப் பண்புகளை தொடர்ந்து வலுப்படுத்துவோம்!

## முயிஸ்-முஃப்தி நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துக்கள்

இவ்வாண்டு நமக்கு மீண்டும் ரமலான் நோன்பை நல்கிய அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும். அவன் நமது கடமைகளை ஏற்றுக்கொண்டு, அளவற்ற ஆசிகளை நமக்கு வழங்கட்டும். அதோடு, நம் வாழ்க்கையை வழிநடத்த முன்னுதாரணமாகத் தொடர்ந்து விளங்கும் நமது அன்புக்குரிய நபிகள் நாயகம் அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்.

ரமலான் மாதம் முழுவதும், இஃப்தார்- நோன்பு திறத்தல், இரவு நேரத் தொழுகைகள் மற்றும் குடும்பத்தோடு ரமலானைக் கொண்டாடுவோம் என்ற கருப்பொருளுக்கு ஏற்ப அறிவாற்றலை வளர்த்துக் கொள்ளவும், குடும்ப உறவை வலுப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்ட பற்பல திட்டங்கள் ஆகியவற்றில் கலந்துகொள்ள நம் பள்ளிவாசல்களில் சமூகத்தினர் ஒன்றுகூடினர்.

வசதி வாய்ப்புகள் குறைந்தவர்களுக்கு ரமலானின் நல்லாசிகள் கிடைக்கச் செய்யவும் நாம் ஒன்றுகூடி செயல்பட்டோம். இந்தக் கொடை உணர்வை நமது இஸ்லாமியப் பண்புகளின் ஒரு முக்கிய அங்கமாக நாம் தொடர்ந்து பேணிக் காக்கவேண்டும்.

ரமலானின் போது நாம் வளர்த்த குடும்பப் பண்புகளை, ஷவ்வால் மாதத்தில் தொடர்ந்து வலுப்படுத்துவோம். நமது குடும்ப உறுப்பினர்கள், அண்டை வீட்டார்கள் ஆகியோருடன் பதிய, ஆரோக்கியமான உறவுமுறையை நிலைநாட்டிடுவோம். சிங்கப்பூரின் பல கலாசார சமுதாயத்தில் நல்லிணக்கமிக்க சமய வாழ்க்கையின் நெறிகளுடன் வாழ்ந்திட, தன்னலமற்ற அன்பு, பரஸ்பர மரியாதை, திடமான பொறுமை ஆகியவற்றுடன் நமது குடும்ப உறுப்பினர் களைத் தொடர்ந்து அரவணைத்திடுவோம்.

நம் இல்லங்களின் அமைதியான, வசதியான சூழலில் ஷவ்வால் குதூகலத்தை நாம் கொண்டாடும் அதே வேளையில், இயற்கைப் பேரிடர்கள், பூசல்கள், படுகொலைகள் ஆகியவற்றால் இடைவிடாத போராட்டத்தில் சிக்கித் தவிப்பவர்களின் வாழ்க்கையை நாம் மறந்துவிடக்கூடாது. நம்மால் முடிந்த வழிகளில் அவர்களுக்கு உதவியும், நிவாரணமும் அளிக்க நாம் செயல்படவேண்டும். இது போன்ற சோதனைகளுக்கு உள்ளானவர்கள் தீங்கிலிருந்து பாதுகாக்கப்பட்டு, விடாமுயற்சி, மனவலிமை, பொறுமை ஆகியவற்றை இறைவனின் அருளால் பெறட்டும் என பிரார்த்திப்போம். அவர்களது வாழ்க்கையில் அமைதி மீண்டும் திரும்பட்டும்.

ஈதுல்பித்ரி கொண்டாட்டத்தை முன்னிட்டு முயிஸுக்கு ஆதரவளித்து, முயிஸ் மீது நம்பிக்கை வைத்த சமூகத்திற்கு எங்களின் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ரமலானின் கருணைமிகு உணர்வு நீடித்து நிலைக்கட்டும். அனைவருக்கும் ஊக்கமளித்து நல்லாசிகளைப் பரப்பும் பரிவுமிக்க உன்னத சமூகத்தை நிர்மாணிக்கும் எங்கள் முயற்சிக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் எப்போதும் உறுதுணையாக இருந்து வழிகாட்டட்டும்.

## நபி மொழி

ஒவ்வொரு நற்செயலும் ஓர் அறச்செயலேயாகும்.

உங்கள் சகோதரனைப் புன்சிரிப்புடன் பார்த்தலும், நன்மை செய்யும்படி பிறரைத் தூண்டுதலும், தீமையில் இருந்து பிறரை விலக்குவதும் அறச்செயல்களே!

வழிதவறியவனுக்கு சரியான வழியைக் காட்டுவதும், எதிரே வருபவனை புன்முறுவலுடன் வரவேற்பதும் அறச்செயலே!

பாதையில் கிடக்கும் முள்ளை எடுத்தெறிவதும் ஓர் அறச்செயலே!

# PHOTO NEWS

# படச் செய்திகள்



**Minister Dr. Yaacob Ibrahim with the second group of Haj pilgrims at Changi Airport, 14 Sep 2015**




**Presentation of President's Challenge Cheque to His Excellency Dr. Tony Tan, 5 Sep 2015**




**MUIS's National Day Observance held at Singapore Islamic Hub, 8 Aug 2015**



**Haj pre-departure briefing by MUIS & The Association of Muslim Travel Agents Singapore, 2 Aug 2015**



**Officiating the completion of Al-Huda mosque's enhancement works, 24 Jul 2015**



**Opening of Singapore's newest mosque, Al-Islah at Punggol, 5 Jun 2015**




**Launch of the Wakaf Heritage Trail, 30 May**



**Wakaf disbursement, $2.79 million was disbursed to various Islamic Instituitions, 22 May 2015**

# தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்க ரமலான் நிகழ்ச்சிகள்



தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் ரமலான் மாத சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தியது. தொடக்கமாக 27.6.2015 அன்று அல்அப்ரார் பள்ளிவாசலில் நோன்பு திறப்பு நிகழ்ச்சியை நடத்தியது. மறுநாள் ஜாமிஆ சூலியா பள்ளிவாசலுடன் இணைந்து நடத்திய இஃப்தார் குறிப்பிடத்தக்கது. துணைப் பிரதமரும், நிதியமைச்சருமான திரு தர்மன் சண்முகரத்தினம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சிங்கப்பூர் குடியரசின் 50ஆண்டு பொன்விழாவை நினைவுகூர்ந்து, குறைந்த வருமானமுள்ள 50 குடும்பங்களுக்கு சங்கத்தின் சார்பில் பற்றுச்சீட்டுகளை வழங்கினார் அமைச்சர். இந்த இஃப்தார் நிகழ்ச்சியில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டார்கள். சங்கத்தின் இரண்டு பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்று உபசரித்தனர்.

**லைலத்துல் கத்ர் நிகழ்ச்சி**

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கமும் மஸ்ஜித் அல் கைர் மதரஸாவும் இணைந்து 13.7.2015 அன்று ரமலான் பிறை 27 லைலத்துல் கத்ர் இரவைக் கொண்டாடின. அல் கைர் பள்ளிவாசலில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் முந்நூறுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

முறையான தராவீஹ் தொழுகைக்குப் பிறகு சங்கத்தின் உஸ்தாத் ஹஸன் அலி ஃபைஜியின் பயான் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து தஸ்பீஹ் நஃபில் தொழுகையும் சிறப்பு துஆவும் இடம்பெற்றன. நிறைவாக அனைவருக்கும் சஹர் நேர உணவு வழங்கப்பட்டது.

# ஹாஜி இப்ராஹிம் மரைக்கான் மறைவு

இந்திய முஸ்லிம் பேரவையின் முன்னாள் தலைவர் (1995-1997) ஹாஜி இப்ராஹிம் மரைக்கான் 9.8.2015 அன்று காலமானார். அவருக்கு வயது 82.

தமிழ் முஸ்லிம் ஜமாஅத்தின் தலைமைப் பொறுப்பிலும் இருந்த அவர், முயிஸ் செயலவையில் மூன்று தவணைகள் பணியாற்றினார். ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம், தென்னிந்திய ஜமியத்துல் உலமா ஆகியவற்றிலும் முக்கிய பொறுப்புகளை வகித்தார்.

சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம்களின் ஒற்றுமைக்கும், சமூக பொருளாதார நன்னிலைக்கும் பாடுபட்ட ஹாஜி இப்ராஹிம் மரைக்கான், முஸ்லிம் மாணவர்களின் கல்வித் தேர்ச்சியை உயர்த்தவும் உதவி ஒத்துழைப்புகளை வழங்கினார்.



சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றம் (முயிஸ்), ஹாஜி இப்ராஹிம் மரைக்கானின் சேவைகளைப் பாராட்டி ஜாஸா பக்தி விருதை 2012ல் வழங்கியது. முயிஸின் அந்த விருதை அதிபர் டோனி டானிடமிருந்து பெற்றுக்கொண்ட அவர், தமது உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம் இது என்று நன்றி பாராட்டினார். இவ்வாண்டு அவருக்கு முயிஸ் பொன்விழா (MUIS SG50) விருது வழங்கப்பட்டது.

# ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் இஃப்தார் - சமய நல்லிணக்க நிகழ்ச்சி

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), 27.6.2015 அன்று பென்கூலன் பள்ளிவாசலில் நோன்பு திறப்பு மற்றும் சமய இன நல்லிணக்க நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக கலாசார, சமூக, இளையர் துறைகளுக்கான அமைச்சர் லாரன்ஸ் வோங் கலந்து கொண்டார்.

“ஜமால் முஹம்மது கல்லூரி மாணவர்களைப் போன்ற கல்வியாளர்களும், பணியாளர்கள் ஒவ்வொருவரும் சிங்கப்பூரின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்ய வேண்டும். திறன் சார்ந்த தொண்டூழியத்தில் ஈடுபட அதிக அளவில் சிங்கப்பூரர்கள் முன்வர வேண்டும். ரமலான் மாதத்தில் மட்டுமல்லாமல், ஆண்டு முழுவதும் இச்சங்கம் பல்வேறு சமூகப்பணி யாற்றி வருகிறது. சிண்டாவுடன் இணைந்து பின்தங்கிய மாணவர்களுக்கான இலவச கணிதப் பட்டறைகளை இச்சங்கம் நடத்தியது பாராட் டுக்குரியது. இது போன்ற நோன்பு திறக்கும் நிகழ்ச்சிகளால், நம் சமூக உறவுகள் மேம்பட்டு, நாம் அனைவரும் ஒன்றுபட்ட பலஇன சமூகமாகத் தொடர்ந்து திகழமுடிகிறது” என்று அமைச்சர் லாரன்ஸ் வோங் குறிப்பிட்டார்.

நோன்புப் பெருநாளைக் கொண்டாடு வதற்காக, ஜாமியா குழந்தைகள் இல்லத்தில் வசிக்கும், 68 ஆதரவற்றக் குழந்தைகளுக்கு இல வசப் புத்தாடைகளை இச்சங்கம் வழங்கியது. இதுபோன்ற நற்பணிகள் பாராட்டுக்குரியது என்றார் அமைச்சர்.

சங்கத்தின் தலைவர் கணக்காய்வாளர் முனைவர் ஹாஜி முஹிய்யத்தீன் அப்துல் காதர் வரவேற்புரை வழங்கினார், “சிங்கப்பூர் எதிர் நோக்கும் சவால்களையும், மிரட்டல்களையும் இளையர்களுக்கு எடுத்துச்சொல்லி, சிங்கப்பூரின் பாதுகாப்பிற்கும், அமைதிக்கும் நாம் ஒவ்வொரு வரும். நம் கடமையைச் செய்ய வேண்டும்” என்று அவர் கேட்டுக்கொண்டார்.


எம்.இ.எஸ்.(MES) குழுமத்தின் தலைமை நிர்வாகி அல்ஹாஜ் எஸ்.எம்.அப்துல் ஜலீல், அமைச்சருக்கு பொன்னாடைப் போர்த்தி




கௌரவித்தார். தமிழர் பேரவையின் தலைவர் டாக்டர் ஆர்.தேவேந்திரன் அமைச்சருக்கு நினைவுப்பரிசு வழங்கினார். சங்கத்தின் செயலவை உறுப்பினர் கணிதப் பேராசிரியர் ஹாஜி அமானுல்லா நிகழ்ச்சியை வழிநடத்தி னார். சங்கத்தின் செயலவை உறுப்பினர் ஜனாப் ஃபரீஜ் முஹம்மது இறை வசனங்களை ஓதினார். சங்கத்தின் செயலவை உறுப்பினர் ஜனாப் அப்துல் நஜீர் நன்றியுரை கூறினார். சிங்கப்பூர் பென்கூலன் பள்ளிவாசலின் இமாம் ஹாபிழ் மௌலவி கலீல் அஹ்மது ஹசனி நோன்பின் மாண்புகளை எடுத்துரைத்தார்.

சிண்டா, ஜாமியா சிங்கப்பூர், இந்திய முஸ்லிம் பேரவை, நற்பணிப் பேரவை, வளர்தமிழ் இயக்கம், தமிழர் பேரவை, தமிழ் மொழி பண்பாட்டுக் கழகம், சிங்கை தமிழ் சங்கம், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள், மற்றும் சமூக அமைப்பு களின் பிரமுகர்களும், உறுப்பினர்களுமான சுமார் 300 பேர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் மறைவு



முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் 27.7.2015 மாலை காலமானார். அவருக்கு வயது 84.

இந்தியாவை அணுவாயுத நாடாகவும், ஏவுகணை நாடாகவும் மாற்றிய சாதனையாளர் அவர். தமிழ் நாட்டின் ராமேஸ்வரத்தில் பிறந்து அணுசக்தி விஞ்ஞானியாக உயர்ந்த அவர் 2002ஆம் ஆண்டில் இந்தியாவின் 12வது அதிபராகப் பதவியேற்றார்.

அதிபர் ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் 2006 பிப்ரவரி மாதம் சிங்கப்பூருக்கு வருகையளித்து மதியுரை அமைச்சர் லீ குவான் இயூ முதலான தலைவர்களைச் சந்தித்தார்.

ஜுலை 27 அன்று உயிர் துறந்த அவர்களின் நல்லுடல், 29.7.2015 அன்று ராமேஸ்வரத்துக்குக் கொண்டுவரப்பட்டு, மறுநாள் அரசாங்க மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

சிங்கப்பூரிலும் அவருக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. இந்திய முஸ்லிம் பேரவையும் மற்ற இந்திய முஸ்லிம் அமைப்புகளும் இணைந்து 6.8.2015 மாலை பென்கூலன் பள்ளிவாசலில் அவருக்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சியை நடத்தியது.

சிங்கப்பூர் இந்திய தூதரகத்தின் முதன்மைச் செயலாளர் டாக்டர் நிதிஷ் பிர்டி இரங்கல் செய்தியை வெளியிட்டார். இந்திய முஸ்லிம் பேரவையின் செயலாளர் ஹாஜி முஹம்மது ஜாஃபர், தலைவர் ஃபரியுல்லாஹ் துணைத்தலைவர் டாக்டர் கே.எம்.தீன், பேராசிரியர் சுப. திண்ணப்பன், தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் ஹரி கிருஷ்ணன், அமீர் அலி, நாணயமாற்று வணிகர் சங்கத் ததலைவர் ஜஹாங்கீர், அன்பழகன் ஆகியோர் டாக்டர் அப்துல் கலாமின் சாதனைகளையும், சிந்தனைகளையும் எடுத்துரைத்தனர்.

---

**ஜமியா சிங்கப்பூர் துணைத் தலைவர், முனைவர் எச் முஹம்மது சலீமின் உரை**

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்
என்பான் வள்ளுவன்.

பெரியார் என்பவர் செயற்கரிய செயல்களைச் செய்பவர் மற்றையோர் எல்லாரும் சிறியவர்கள் என்பது வள்ளுவரின் துணிபு.

மறைந்த மேனாள் இந்திய குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் பெரியார். செயற்கரிய செய்த சாதனை மனிதர், ஆற்றல் மிக்க அணு விஞ்ஞானி, அறிவுசார் நல்லாசிரியர், தேசத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தபோதும் பகட்டோ, பட்டாடோபமோ இல்லாமல் பணிவையும் அன்பையும் தன அணிகலனாய்ப் புனைந்து வலம் வந்தவர், நம் நினைவில் நிலைத்தவர்.

எல்லாத் தரப்பினரோடும் இயல்பாகப் பழகியவர், பல்கலைக் கழகங்கள், பன்னாட்டு அறிவியல் மாநாடுகள், கல்வியாளர் கருத்தரங்குகள் என்று பல்வேறு உயர் தளங்களில் பேசுகின்ற அதே கவனத்துடன் அவர் பிள்ளைகளிடமும் பேசினார்.

ஒளிபடைத்த கண்ணினாய் வா என்று பாரதி அழைத்தான். கலாம் சாதிக்கூட்டங்களாய் பிரிந்துகிடந்த சமுதாயத்தை ஒன்றுதிரட்டி சாதிக்கும் கூட்டம் என்னும் சரித்திரப் புரட்சியை அறுவடை செய்ய பிள்ளைகளின் கண்களில் கனவுகளை விதைத்தார்.

காலம் என்னும் மரத்தில் காய்த்துக் கனிந்து மணம்பரப்பி வீழ்ந்த கனி கலாம்.

புவிப் பரப்பில் அங்குமிங்குமாய்க் கலாம்கள் இருக்கலாம் இருந்திருக்கலாம், ஆனால், அப்துல் கலாம் தனித்துவம் மிக்கவர்

அவர் ஒரு மாதிரி அறிவியல் விஞ்ஞானி, மாதிரி ஆசிரியர், மாதிரி தலைவர், மாதிரி மனிதர் - வாழிய கலாமின் புகழ்.

# சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூகசேவை மன்றத்தின் சுகாதார விழிப்புணர்வு பட்டறை

இந்திய முஸ்லிம் சமூகசேவை மன்றத்தின் சார்பில் ஈசூன் தாருல் மக்மூர் பள்ளிவாசல் அரங்கத்தில் சுகாதார விழிப்புணர்வு பட்டறை 24.5.2015 மதிய வேளையில் சிறப்பான முறையில் நடைபெற்றது. முதல் அங்கத்தில் நுரையீரல் நோயைப் பற்றி சிங்கப்பூர் டான் டோக் செங் மருத்துவமனை அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பஜ்ருலுதீன் சிறப்புரை ஆற்றினார். நுரையீரல் நோயைப்பற்றியும் நோயை வருமுன் தடுப்பது பற்றியும் அவர் விளக்கமளித்தார். கேள்வி பதில் அங்கத்தில் பலர் இந்நோய் சம்பந்தமாக மருத்துவரிடம் கேள்விகளைக் கேட்டு உரிய விளக்கம் பெற்றனர்.



அடுத்து நடந்த இரண்டாவது அங்கத்தில் சிங்கப்பூர் தேசிய மருத்துவ பல்கலைக்கழகத்தின் மூத்த பொதுமருத்துவர் டாக்டர் ராகவ் சுந்தர் பெருங்குடல் புற்றுநோயைப்பற்றியும், அதனால் ஏற்படும் விளைவுகளையும், நோய் வராமல் தடுப்பது பற்றியும் உரையாற்றினார். கேள்வி-பதில் அங்கமும் நடைபெற்றது.

இப்பட்டறையில் நூற்றுக்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள், முஸ்லிம் குடும்பப் பெண்கள், பலதுறைக் கல்லூரி மாணவ, மாணவியர்கள், முஸ்லிம் இளையர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. இதன் மூலம் சுகாதார விழிப்புணர்வு பெற்றதாக பெரும்பாலானோர் கருத்துரைத்தனர். மருத்துவர்களின் சமூகசேவையைப் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இப்பட்டறைக்கான ஏற்பாடுகளை இம்ஸா எனப்படும் இந்திய முஸ்லிம் சமூகசேவை மன்றத்தின் ஹெல்த்கேர் குழுவினர்கள் சிறப்பான முறையில் செய்திருந்தனர்.

தகவல்: தமிழாசிரியர் அ.ஜகூர் உசேன்




## நோன்புப் பெருநாள் நிகழ்ச்சி

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், தெலுக் பிளாங்கா இந்திய நற்பணி செயற்குழுக்குழு, இணைந்து ஏற்பாடு செய்த நோன்புப் பெருநாள் கொண்டாட்ட நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சி தெலுக் பிளாங்க சமூக மன்றத்தில் நடைபெற்றது.

# சிங்கப்பூர் முத்துப்பேட்டை சங்க இஃப்தார்

சிங்கப்பூர் முத்துப்பேட்டை அஸோசியேசன் இஃப்தார் நிகழ்ச்சி பென்கூலன் பள்ளிவாசலில் *5.7.2015* அன்று சிறப்பாக நடைபெற்றது.

சங்கத் தலைவர் ஜாகிர் உசேன் முதலில் வரவேற்புரை வழங்கினார். செயற்குழு உறுப்பினர் ஜனாப் ரஷீத் அலி சங்கம் கடந்து வந்த பாதையை பற்றி தமது உரையில் எடுத்து கூறினார்கள்.

சிறப்பு விருந்தினராக இந்திய முஸ்லிம் பேரவை (FIM) தலைவர் ஜனாப் பரியுல்லாஹ் தமது உரையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவினரைப் பாராட்டினார். இது போன்ற பொது நிகழ்ச்சிகள் வரும் காலங்களில் தொடர வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பென்கூலன் பள்ளிவாசல் இமாம் அவர்களின் பயான் நடைபெற்றது. இதில் FIMல் அங்கம் வகிக்கும் *16* சங்கத்தின் முக்கிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். பாரம்பரிய பிரியாணி தயார் செய்து வழங்கப்பட்டது. *200*க்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் குடும்பத்துடன் கலந்து கொண்டார்கள்.






மஸ்ஜித் ஜாமிஆ சூலியா பள்ளிவாசல் மேலாண்மை செயற்குழுவின் தலைவர் ஷேக் பக்ரூதின், இஸ்லாமிய சமய மன்றத்தின், ஜாஸா பக்தி (சமூக சேவை) விருதை, மாண்புமிகு சிங்கப்பூர் அதிபர் டோனி டானிடமிருந்து பெற்றார்.



இந்திய முஸ்லிம் பேரவையின் துணைத் தலைவர் டாக்டர் கே.எம்.தீன் அவர்கள், சவுதி அரேபிய ஹஜ் அமைச்சின் அழைப்பில், இவ்வாண்டு ஹஜ் யாத்திரை மேற்கொண்டார்.